ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 30 ஏக்கர் பரப்பளவு கொண்ட சின்னக்குளம் உள்ளது. அந்தக் குளத்தைத் தூர் வாரி, குளத்தைச் சுற்றி முள்வேலி அமைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டன்சத்திரம் நகராட்சியில் தினந்தோறும் சேமிக்கின்ற காய்கறி கழிவுகளை, குப்பைகளைக் கொட்டுவதற்கு நகராட்சிமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 2-55*

அதைப்போல, கொடைக்கானல் ஒன்றியம், பூண்டி ஊராட்சியிலுள்ள தொலிக்கம்பட்டி, தேவனம்பட்டி குளங்களின் அணைகள் பழுதடைந்து கசிவு ஏற்பட்டு நீர் வீணாக வெளியேறுகின்றது. இதனைச் சரி செய்து புதுப்பித்தால் கிளாவரை மற்றும் கீழ்கிளாவரையில் வாழும் 700 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி மற்றும் 5,000 ஏக்கர் நிலங்களின் விவசாயத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதனை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கொடைக்கானல் ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சியில் உள்ள மன்னவனூர் பரப்பலாறு அணை பழுதுடைந்துள்ளது. இதனைச் சரி செய்து நீர்மட்டத்தினை உயர்த்துவதால் வீணாகும் அதிகப்படியான நீரைத் தடுப்பதோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள்.

## 6. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1-9-2016 (வியாழக்கிழமை) அன்று அவையில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 22-8-2016 (திங்கட்கிழமை) அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

*2016 ஆகஸ்ட் 5]* [பேரவைத் தலைவர்]

*22-8-2016 அன்று அவையில் எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 41-வருவாய்த் துறை மற்றும் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன 1-9-2016 அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் அறிவிக்கிறேன்.*

## 3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை**
} *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. ஐபி. செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சி, மன்னவனூர் பரப்பலாறு அணை பழுதுடைந்துள்ளது. இதனைச் சரி செய்து அணையின் நீர்மட்டத்தினை உயர்த்துவதால் வீணாகும் அதிகப்படியான நீரை தடுப்பதோடு கைகாட்டி, மன்னவனூர் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையையும், விவசாயத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும் என்பதனை இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன். கொடைக்கானல் மேல்மலைப் பகுதி, பூண்டி ஊராட்சியில் புலவச்சி ஆற்றுப் பகுதி வெள்ளையன்தூவல் என்ற இடத்தில் சமதள நீர்த்தேக்கம் உள்ளது. அந்த இடத்தில் தடுப்பணை கட்டும்பட்சத்தில் போளூர், கிளாவரை பகுதிகளில் வசிக்கும் 1,850 குடும்பங்களுக்கு குடிநீர் ஆதாரமாக இருக்கும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நீர்ப் பாசனத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, இங்கே ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)*